இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மறைநூலில் சொல்லியிருப்பது இதுவே: “வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது.” இதுவே நீங்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும் என நாங்கள் பறைசாற்றும் செய்தியாகும். ஏனெனில், ‘இயேசு ஆண்டவர்’ என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர்; வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். ஏனெனில், “அவர்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்” என்பது மறைநூல் கூற்றுழ (உரோ 10:8-11)

# போர்கள் யாருக்கும் பயனளிக்காது!

## அமைதி மற்றும் நீதிக்காக நோன்பேற்று இறைவேண்டலுக்கு அழைப்பு

மலேசியா-சிங்கப்பூர்-புருணையின்
அன்பான கத்தோலிக்க
இறைமக்களே!,

இந்த மலேசியா-சிங்கப்பூர்-புருணை வட்டாரத்தில் உள்ள கத்தோலிக்க இறைமக்களைப் போலவே, உக்ரைனில் நடக்கும் போர் மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் நீதியின் மீதான அதன் தாக்கம், எல்லா இடங்களிலும் உள்ள மக்களின் வாழ்க்கையை பாதிக்கிறது. போர்களின் வரலாறும் காரணங்களும் சிக்கலானதாக இருக்கலாம். ஆனால் நீண்ட காலப் போர்களால் நாம் உட்பட எவருக்கும் அதனால் பயனில்லை என்பதை மறுப்பதற்கில்லை. மாறாக, அவை பெரும் அழிவுக்கு மட்டுமே அதே வேளையில் பெரும் துன்பங்களுங்கும் இடப்பெயர்வுககளுக்கும் வழிவகுக்கின்றன.

எனவே, நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களுடன் சேர்ந்து, ஆசியா முழுவதும் உள்ள கிறிஸ்தவ சபைகளுடனும், அனைத்துத் தலைவர்களுடனும் அவர்களின் ஒருமித்த குரலோடு நாங்கள் இணைகிறோம். ரஷ்யா, உக்ரைன் மற்றும் அனைத்து ஆர்வமுள்ள தரப்பினரையும் வன்முறை மற்றும் போருக்கான தீய முடிவை நிறுத்திவிட்டு, அமைதி, நீதி மற்றும் உண்மையின் அடிப்படையில் கலந்துரையாட முன்வருமாறு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

புரிந்துணர்வோடு கூடிய மரியாதைக்கும் அனைத்து தரப்பினரின் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்வதற்கும் மற்றும் நாடுகளுக்கிடையிலான ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதற்கும் ஒன்றித்த வாழ்வுக்கான நீடித்த அமைதி மற்றும் நீதி இன்றியமையாதவையாகும்.

இதனிமித்தம், உக்ரைன் மக்களுக்கான மீட்புத் திட்டத்தை உலகம் அவசரமாக உருவாக்க வேண்டும்; தொடர்ந்து அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒவ்வொரு முயற்சியையும் வலுப்படுத்த வேண்டும்.



உக்ரைனிலும் உலகிலும் அமைதியும் நீதியும் நிலவிட நோன்பு மற்றும் இறைவேண்டல் நாளாக இந்த தவக்காலத்தின் முதல் நாளை விபூதி புதன் அன்றும் தொடர்ந்து வரும் நாள்களிலும் மேற்கூறிய நோக்கங்களுக்காக, அனைத்து கத்தோலிக்கர்களும், நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் கொண்ட மக்கள் அனைவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இறைவேண்டல் அழைப்பில் நாம் பங்குபெற வேண்டுகிறோம். இந்த போரை நிறுத்தி அமைதியையும் நீதியையும் நிலைநாட்ட அனைத்து தலைவர்களின், முடிவெடுப்பவர்களின் இதயங்களை இறைவன் தொடட்டும். அமைதி மற்றும் நீதியின் அரசியான அன்னை மரியா, அமைதி மற்றும் சகோதரத்துவத்துவப் பாதைக்கு நம்மை இட்டுச் செல்வாராக.

இப்படிக்கு,

கிறிஸ்துவின் அர்ப்பணிப்பில்,

*ஆயர், செபஸ்தியன் பிரான்சிஸ்DD,*
*தலைவர்,*

# போரை நடத்துபவர்கள், மனிதகுலம் குறித்து அக்கறையற்றவர்கள்!

**வத்திக்கான்:** உலகில் போரை நடத்துபவர்கள் அனைவரும், மனிதகுலம் குறித்து சிறிதும் அக்கறையற்றவர்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அழிவுதரும் ஆயுதங்களைக் கைக்கொள்வது என்பது, இறைவிருப்பத்திற்கு எதிரானது என உரைத்தார்.

உக்ரைனில் இடம்பெறும் இரஷ்ய தாக்குதல் குறித்து, பிப்ரவரி 27 கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நண்பகல் மூவேளை செப உரைக்குப்பின் தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மார்ச் 2ம் தேதி, திருநீற்றுப் புதனன்று திருஅவையில் உக்ரைன் நாட்டின் அமைதிக்கான இறைவேண்டல் மற்றும் நோன்பு நாள் கடைப் பிடிக்கப்பட உள்ளதை மீண்டும் நினைவூட்டினார்.

போரைத் தொடங்கி நடத்துபவர்கள், மக்களின் உண்மையான வாழ்வு மீது அக்கறை காட்டுவதில்லை, மாறாக, அவர்கள், அனைத்திற்கும் மேலாக, கட்சி நலன்கள் மற்றும், அதிகாரத்தை முன்னிலைப்படுத்துபவர்களாக இருப்பதால், உண்மையாகவே, எல்லாப் போர்களிலும் அப்பாவி மக்களே பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நாள்களில் புகலிடம் தேடுகின்ற வயதுமுதிர்ந்தோர், தங்கள் பிள்ளைகளுடன் நாட்டைவிட்டு வெளியேறும் அன்னையர் போன்ற நம் சகோதரர், சகோதரிகளுக்கு மனிதாபிமானக் கதவுகள் திறந்துவிடப்பட்டு, அவர்கள் வரவேற்கப்படவேண்டும் என கேட்டுக்கொண்டார்.



வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் உக்ரைன் நாட்டுக் கொடிகளுடன் மக்கள் (Vatican Media)

உக்ரைன் மற்றும், உலகெங்கும் இடம்பெற்றுவரும் போர்கள் குறித்த மிகுந்த மனவேதனையை வெளியிட்டு, வன்முறையைப் பயன்படுத்துவோருடன் அல்ல, மாறாக, அமைதியை ஏற்படுத்துவோருடன் கடவுள் இருக்கிறார் என்று கூறியத் திருத்தந்தை, உக்ரைன் மற்றும், உலகின் அமைதிக்காகவும், ஏமன், சிரியா, எத்தியோப்பியா போன்று, உலகின் பல்வேறு பகுதிகளில் போரினால் துன்புறும் மக்களுக்காகவும் இறைவேண்டல் செய்யுமாறு அனைவரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

உக்ரைன் மக்கள் மாண்போடு வாழ்வதற்கு, முதலில் ஆதரவுக்கரம் நீட்டியவர்கள், போலந்து மக்களே என்றுரைத்து, அவர்களின் தாராளமனதையும் திருத்தந்தை பாராட்டியுள்ளார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ்: வத்திக்கான்*

# மறைபோதகமா? மறைக்கல்வியா? எது சரி?

**சமீபத்தில் நான் மறைக்கல்வி பற்றி நடத்தப்பட்ட பயிற்சியின் காணொளி ஒன்றைப் பார்த்தேன். அதில் அப்பயிற்றுனர் 'மறைப் போதகம்' என்றே சொல்ல வேண்டும் மறைக்கல்வி என்று சொல்லக்கூடாது என்று கூறினார். இது குறித்து தங்கள் கருத்தென்ன? அவர் சொன்னது சரியா?**

திரேசம்மாள்- ஜொகூர்

தாங்கள் எனக்கு அனுப்பிய அந்த காணொளியைப் பார்த்தேன். முதலாவதாக அது ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு மொழிப்பெயர்ப்பு செய்ய கூகல் படிவம் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அதனால்தான் இயேசுவின் இறைவேண்டலுக்கு (Our Father) இயேசுவின் பிரார்த்தனை என்று இருந்தது. இது தவறு. பிரார்த்தனை என்பது வேறு இறைவேண்டல் என்பது வேறு. மேலும் பிரார்த்தனை என்ற சொல்லை நாம் இப்போது பயன்படுத்துவதில்லை.

அடுத்து, catechism என்பது மறைக்கல்வி அல்ல. அது மறைக்கல்வி நூல் என்று பொருள். Catechesis என்றால் தான் மறைக்கல்வி என்று பொருள்படும். உதாரணமாக, Catechism of Catholic Church என்றால், கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூல் என்பது பொருள். இவ்வாறாக, அந்த காணொளியின் முழுவதிலும் திருச்சபை என்றே கூறப்படுகிறது. இக்காலத்தில் அனைவரும் திருஅவை என்றே கூறுகிறோம். ஆகவே. இதுபோன்ற தவறான மொழிபெயர்ப்பு நம்மிடையே குழப்பத்தை உண்டாக்கும்.

அடுத்து, 'மறைப் போதகம்' என்றே சொல்ல வேண்டும் மறைக்கல்வி என்று சொல்லக்கூடாது என்பது ஏற்க முடியாத ஒன்று. மறைக்கல்வி, திருவிவிலியம் மற்றும் திருவழிபாடு ஆகிய மூன்றுக்கும் அதிகாரப்பூர்வ மொழிபெயர்ப்புக்கு தமிழ் நாட்டில் தின்டிவனத்திலுள்ள மையத்தின் மொழிப்பெயர்ப்பையே நாம் ஏற்க வேண்டும். இது வத்திக்கானின் முடிவு.

அதன்படி, ஒரு காலத்தில் ஞான உபதேசம், மறைப்போதகம் என்று அழைக்கப்பட்டது கடந்த 25 ஆண்டுகளாக மறைக்கல்வி என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது அதிகாரப்பூர்வ மொழிப் பெயர்ப்பு. மலேசியாவில் மறைக்கல்வி ஆணையம் வெளியிடப்பட்டுள்ள நூல்களும் மறைக்கல்வி நூல்கள் வரிசை என்றே பெயரிடப்படுள்ளது.

இந்நிலையில் மறைக்கல்வி என்று கூறக்கூடாது. மறைப்போதகம் என்றுதான் கூற வேண்டும் என்பது மறைக்கல்வி ஆசிரியர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும். மேலும், 'மறை போதகம்' என்பது மறையை போதிப்பதை மட்டுமே குறிப்பிடுகிறது. அது ஒருவழி பயணம். மாறாக, மறைக்கல்வி என்பது கற்பிப்பதையும் கற்றலையும் (ஆசிரியரையும் மாணவரையும்) இணைத்துக் கூறுவதாக பொருள்படுகிறது. எனவே, இன்றைய மனிதமைய (anthropological Approach) வழிமுறையில், மறைக்கல்வி என்று அழைப்பதையே தின்டிவனம் மறைக்கல்வி மையம் பெயர்மாற்றம் செய்தது.

*ஆர்.கே.*

# சமூக நீதி—குரலற்றோரின் குரலாக இருப்பது!

**கோலாலம்பூர்:** சமூக நீதி என்றால் என்ன என்றும், அதில் நீங்கள் எப்படி அங்கம் வகிக்க முடியும் ? என்றும் கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்?

SUARAM-யின் நிர்வாக இயக்குனரான திரு துரைசாமியின் கூற்றுப்படி, ஐக்கிய நாடுகள் சபையால் வரையறுக்கப்பட்ட சமூக நீதி என்பது அமைதியான மற்றும் வளமான சுகவாழ்வு ஆகும், அங்கு மக்கள் கண்ணியமாகவும், மரியாதையாகவும், நியாயமாகவும் நடத்தப்படுவார்கள். இந்த சமநிலையில் ஏற்றத்தாழ்வு ஏற்படும் போதுதான் சிக்கல்கள் எழுகின்றன என்றார்.

மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் போராட்டவாதியான திரு துரைசாமி அவர்கள், கடந்த பிப்ரவரி 25 அன்று புனித யோவான் பேராலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக நீதி கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்றார். அப்போது, நம் நாட்டில் என்ன நடக்கிறது என்பதை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது என்றார். நம் நாட்டில் ஒரு முறையான சமூக நீதி கடைப்பிடிக்கப்பட வெண்டும் என்றால், நடைமுறையில் அது கடைப்பபிடிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் சமூக நீதி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கூறினார்.

இதை கலந்துரையாடலின் இரண்டாவது குழு உறுப்பினர் அருள்பணி டாக்டர் கிளாரன்ஸ் தேவதாஸ் அவர்கள் மேற்கண்ட கருத்தை ஒப்புக்கொண்டார். சமூக நீதியைப் பற்றி பலர் கவலைப்படுவதில்லை, ஏனென்றால் அது அவர்களைப் பாதிக்காது என்ற எண்ணமே காரணம் என்றார் டாக்டர் கிளாரன்ஸ். தற்போதைய தலைமுறையினரின் மிகப்பெரியக் குறைகளில் ஒன்று அக்கறையின்மை மற்றும், 'tidak apa' எனும் மனப்போக்கும் எதையும் செய்ய விரும்பாத அலட்சியப் போக்கும் என்று மேலும் கருத்துரைத்தார்

சமூக நீதியானது கத்தோலிக்க திருஅவைக்குப் புதிதல்ல. ஏனென்றால் நாம் நீதி நேர்மைக்கு உடபட்ட கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளோம் என்றார். அவர் தொடர்ந்து இறைவாக்கினர் மீக்காவை மேற்கோள் காட்டினார் (6:8) இவ்வாசகம், நாம் நீதியாக செயல்பட வேண்டும், கனிவாக அன்பு செலுத்த வேண்டும், பணிவுடன் நடக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறது என்றார். திருஅவையானது, நீதியைப் பற்றியது என்றும், கல்வி மற்றும் உடல்நல பாதுகாப்பில் ஏழைகள் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளை நிறுவுதல் ஆகியவற்றில் முன்னிலையில் உள்ளது என்றும் எடுத்துரைத்தார்.




அருள்பணி டாக்டர் கிளாரன்ஸ் அவர்களின் கருத்துப்படி, சமூக நீதியை கடைப்பிடிக்க ஒருவர் ஒரு நிறுவனத்தில் சேர வேண்டிய அவசியமில்லை. ".. சமூக நீதியை கடைப்பிடிக்க சிறந்த இடம் நமது குடும்பத்தில் உள்ளது," என்று அவர் மேலும் கூறினார், நம் வீட்டுப் பணி பெண்கள், உணவகத்தில் பணியாற்றும் பணியாளர் போன்ற நம்மைச் சுற்றியுள்ளவர்களை நாம் நடத்தும் விதத்தை எடுத்துகாட்டாகக் கூறினார்.

திரு துரைசாமி அவர்கள் அனைவரையும் சமூக நீதித்துறையில் முதல் படி எடுத்து வைத்து செயல்படுமாறு கேட்டுக்கொண்டு அமர்வை முடித்தார், மேலும் அச்சத்தை நிறுத்தவோ அல்லது சமூக நீதியின் நடைமுறையை கட்டுப்படுத்தவோ அனுமதிக்காதீர்கள். என்று கேட்டுக்கொண்டார்.

## விவிலிய நூலாகிய யோவேல் 2:12-13, உண்மையான நோன்பு பற்றிக் கீழ்வருமாறு கூறுகிறது:

" "இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" என்கிறார் ஆண்டவர். "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்." அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர், நீடிய பொறுமையுள்ளவர், பேரன்பு மிக்கவர்.

# அமைதியின் தூதுவராக, உதவிடும் பண்பாளராக வாழ்வோம்!

கடந்த புதன் அன்று திருநீற்றை ஏற்று, இன்று தவக்காலத்தின் முதல் ஞாயிறுவில் பாதம் பதித்துள்ளோம். தீர்ப்புக்குள்ளாகி இருந்த இவ்வுலகை (யோவா 12:31) இயேசு தன்னுடைய பாடுகள், சிலுவைச் சாவின் வழியாக மீட்கவேண்டும் (பிலி 2: 9-11) என்பது இறைவனின் திட்டம். இத்திட்டத்தை நன்கு அறிந்தவன் சாத்தான்.

எனவே, தன்னை வென்று உலகை அவனது கோரப்பிடியிலிருந்து விடுவிக்க வந்த இயேசுவிடமே வாலாட்டிப் பார்த்தான் சூழச்சியின் தலைவனான சாத்தான் இயேசுவை ஓர் உயர்ந்த மலைக்குக் கூட்டிக்கொண்டு சென்று, அரசுகளைக் காட்டி, தன்னை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினால் எல்லாவற்றையும் தருவதாகச் சொல்கின்றான். பாடுகள் என்பது கடினமான பாதை; சாத்தானை வணங்குவது மிகவும் இலகுவான பாதை. மிகவும் இலகுவான பாதை என்பதற்காக இயேசு சாத்தானை வணங்காமல், கடினமான பாதையான பாடுகளின் பாதையைத் தேர்ந்தெடுத்து, சாத்தானின் சோதனைகளை முற்றிலுமாக முறியடிக்கின்றார். நம்முடைய வாழ்க்கையிலும் இலகுவான பாதையைத் தேர்ந்தெடுத்து அல்லது குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்து முன்னேறுவதற்கான சோதனை வருவது இயல்பு. வாரந்தோறும் மெக்னம், டோட்டோ என பல்வேறு சூதாட்டங்களில் உழைப்பின் பயனை பாழாக்குகிறோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் அந்தச் சோதனையில் வீழ்ந்துவிடாமல், இயேசுவைப் போன்று ஆண்டவரில் உறுதியாக இருந்து, அதனை வெற்றிகொள்வது நல்லது.

இங்கு ஓர் உண்மையை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அது என்னவெனில், நமக்குக் வருகின்ற சோதனைகள் எங்கிருந்தோ வருபவை அல்ல; நம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்களிடமிருந்தும் பொருள்களிடமிருந்தே வரும். இவற்றில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அவற்றில் நாம் வீழ்ந்துவிடாமல், ஆண்டவரில், அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்து சோதனையை வெற்றிகொள்வது நல்லது. ஏனெனில், சோதனைகளை வெற்றிகொள்கின்றவர் வாழ்க்கையில் வெற்றிகொள்கின்றார்.

உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில்கூட பவுலடியார் அதே கருத்தை வலியுறுத்திக் கூறுவார். "அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார்; ஆண்டவர் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்" என்கிறார்.

இன்றைய முதல்வாசகத்தில் மோசே இஸ்ரயேல் மக்களைப் பார்த்து, நீங்கள் கடவுளை நோக்கி மன்றாடியபோது, அவர் உங்கள் வேண்டுதலுக்கு செவிசாய்த்து, பாலும் தேனும் பொழியக்கூடிய கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றார். ஆகவே இவ்வளவு அற்புதங்களையும், அதிசயங்களையும் உனக்குச் செய்த உன் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே வணங்கித் தொழுவாய்" என்கிறார். (இச 26: 4-10).

நிறைவாக, சோதனைகளை எப்படி வெற்றிகொள்வது என்பது பற்றி சிந்தித்துப் பார்க்கும் இவ்வேளையில் சோதனைகள் கடவுளால் அனுப்பப்படுவதில்லை, மாறாக நமக்கு நாமே வருவித்துக்கொண்டது என்பதை உணரந்து, "ஆண்டவரே, சோதனையில் எங்களை விழவிடாதேயும்" என்று ஒவ்வொரு வினாடியும் மன்றாடுவோம்.

*-ஆர்.கே.*

**தவக்காலம் முதலாம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | இ.ச. 26: 4-10 |
| தி. பாடல்: | 1:1-2.10-11.12-13. 14-15 |
| 2ம் வாசகம்: | உரோ 10: 8-13 |
| நற்செய்தி: | லூக்கா 4: 1-3 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை—வாரம் 1**